# தூதன்

தூதன்-27 ஜனவரி 2018 தூது-1

நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். யோவான் 10:10




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| புத்தாண்டும் வாழ்த்தும் | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| மரங்கள் | 20 |
| ஆராதனை பாடல்கள் | 23 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| புதுகிருபை | 27 |
| Health Tips | 28 |
| Birthday Celebrants | 30 |
| Wedding Anniversary Celebrants | 33 |
| The Maccabees / Hasmoneans History | 35 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

# சபை போதகர் மடல்

## வாருங்கள் செல்வோம், வாழ்வை நோக்கி!

## (Together Towards Life)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

புதுப்பிக்கும் ஆண்டவராம் இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகத் திருச்சபை மாமன்றம் (World Council of Churches) இவ்வாண்டின் கருப்பொருளாக "வாருங்கள் செல்வோம், வாழ்வை நோக்கி!" (Together Towards Life) என்பதை அறிவித்துள்ளது. அதன் அடிப்படைக் காரணங்களாக இன்றைய உலகின் பிளவுபட்ட சூழ்நிலைகளான உடைந்த உறவுகள், கலைந்த கூட்டுக் குடும்பங்கள், வன்முறை மற்றும் ஆக்கிரமிப்பால் விரோதமான தேசங்கள், இயற்கைச் சீற்றங்களின் சீரழிவுகள், நுகர்வு மற்றும் நவீனமயமாக்கலின் மயக்கங்கள், படைப்பின் சீரழிவுகளினால் ஏற்பட்டுள்ள வாழ்வின் சுழற்சி பாதிப்பு போன்றவைகள் பார்க்கப்படுகின்றன. இவைகளுக்கிடையேயிருந்து இவ்வுலகை மீட்டு, மீண்டும் இறைவனுக்குள்ளும், படைப்பின் ஒழுங்கிற்குள்ளும், நல் உறவுகளுக்குள்ளும் ஒருங்கிணைக்கும் பணியைத் திருச்சபையானது உப்பாக, ஒளியாக நின்று செய்யவேண்டும் என்ற அறைகூவல் கொடுக்கப் பட்டுள்ளது. வாருங்கள் செல்வோம், வாழ்வை நோக்கி.... இறைவனிடம் திரும்புவோம். (The World Council of Churches has challenged every local Church in the world to reestablish the orderliness of creation back to the divine, fighting against all odds and disparities caused by broken family relationships, violent oppressive forces dividing nations, dangers and devastations of natural calamities, modern consumeristic hallucinations and the shrinking of the life cycle due to extinction of species).

"நான், என் குடும்பம், என் இனம், என் மக்கள், என் நாடு..." என்று சுயநலமாய் மாத்திரம் இருந்துவிட்டால் போதாது. 'தனிமரம் தோப்பாகாது!' பிறர் வாழாமல் நாம்/நான் வாழமுடியாது. ஆகவே இதைச்செய்து நிறைவேற்றுவோம் (Let's do it) என்ற தாரக மந்திரத்துடன் பூமிக்கோளை, அண்டத்தைத் தூய்மைப்படுத்தி ஒருங்கிணைக்கும் அழைப்பு நமக்கு விடப்பட்டுள்ளது. எல்லாரோடும், எல்லாருக்குள்ளும், எல்லாவற்றிலும் தூய வாழ்வு வேண்டும் என்பதை திருமறையின் வெளிச்சத்தில் பல கண்ணோட்டங்களில் பார்க்க உலகத் திருச்சபை மன்றம் அழைக்கிறது.

**1. புதுப்பிக்கும் வாழ்வு (Renewing Life):** 'Oikumene' என்ற கிரேக்க வார்த்தை முழுப்புவியையும் குறிப்பிடுகிறது. இதில் மனுக்குலமும் அடங்குகிறது. "கடவுள் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16) என்ற வசனம் பூமி முழுவதையும் சுட்டுகிறது. அனைவரும் வாழ்வு பெறவே ஆண்டவர் இறங்கி வந்தார். ஆகவே பிறருடைய வாழ்வை மறுப்பது, வாழவிடாமல் தடுப்பது கிறிஸ்துவுக்கு எதிரானது. புதிய வானம் புதிய பூமி எதிர்நோக்கின் கருவிகளாய் விளங்கிச் செயல்படும் பொறுப்பு நமக்கு உண்டு. இதில் விண், மண் உயிர்கள் அனைத்தும் அடங்குமல்லவா! (We are called to renew life in us and in all others so that the Christian responsibility of establishing new heaven and new earth is on process and affirmation of life to one and all. God so loved the world *denotes oikumene in greek* means life for everything and everyone).

**2. அமைதிவாழ்வு (Peace of Life):** உயிர்த்த ஆண்டவர் இயேசு தம் சீடர்மீது தூய ஆவியை ஊதி, சமாதானத்தை வழங்குகிறார் (யோவான் 20:21). உலகம் தரக்கூடிய அமைதியல்ல, தன்னுடைய அமைதியையே இவ்வுலகில் ஏற்படுத்த, அவர்களை ஆற்றல்படுத்தி, ஆளுமை தந்து, அது அனைவருக்குமுரிய அமைதியாயிருக்கும்படி அனுப்புகிறார். அதன்படியே அவரால் அழைப்புப் பெற்று அனுப்பப்பட்டவர்களாகிய நாமும் ஆதிக்க மற்றும் பிரிவினைச் சக்திகளுக்கு எதிராகப் போராடி அமைதியை இவ்வுலகில் ஏற்படுத்தவேண்டும் (In the gospel of John 20:21 Jesus has breathed the holy spirit upon the disciples to make them instruments of peace and today we as apostles of Christ must continue to do it against all oppressive and divisive forces).

**3. நிறைவாழ்வு (Fullness of Life):** "மனுக்குலத்தை மட்டும் மீட்டிட இறைவன் தன் குமாரனை அனுப்பாமல் முழுப்படைப்பையும் மீட்கவே அனுப்பினார்" (ரோமர் 8:19-23). ஆகவே, அண்டசராசரங்களின் பார்வையில், கரிசனையில் வாழ்வைப் பேணிக்காத்து இப்புவி (oikumene) அனைவருக்கும், அனைத்திற்கும் வாழுமிடமாக்கப்பட உழைக்கவேண்டும் (The fullness of life is guaranteed not only for human beings but for the whole creation as asserted by St. Paul in Romans 8:19-23. So let's strive to create an oikumene of life for all beings).

**4. எல்லை கடந்த வாழ்வு (Life beyond boundaries):** "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத். 28:19) என்ற ஆண்டவரின் கட்டளையைப் பெற்ற திருச்சபையானது இன்று சாதி, சமயம், நிறம், இனம், மொழி, புவி அமைப்பு, பால் என்று பிரிந்து

கிடக்கிறது. ஆகவே நற்செய்தியானது இவ்வெல்லைகளைக் கடந்து சென்று, இவ்வுலகை ஒரே புதிய மக்கள் கூட்டமாய், ஒருங்கிணைந்த குடும்பமாய், இறையரசாய் மாற்றவேண்டும் என்ற அறைகூவல் தரப்பட்டுள்ளது. (The Church is challenged to make the world a wholistic, inclusive, integral family crossing all borders of caste, religion, colour, creed, language, geographical affinity and gender bias by obeying the commandment of the Lord in Matthew 28:19).

5. மாற்றுருவாக்க வாழ்வு (Transforming Life): திருப்பணி (Mission) என்பது மையத்திலிருந்து எல்லைக்கும், எல்லையிலிருந்து மையத்திற்கும் நகரவேண்டும். 1 கொரி.1:18-31-ன்படி தேறின ஞானிகள் என்று மார்தட்டிக்கொள்வோர் எல்லையிலும், எளிய விசுவாசமுள்ளோர் மையத்திலும் மாற்றப்படுவர். இதன்வழியே கடவுளின் பொதுநீதியும், புதுவாழ்வும் அனைவருக்கும் உறுதிசெய்யப்பட்டு சமநிலை ஏற்படுத்தப்படும். (Together towards a life of equilibrium according to 1 Cor.1:18-31 in which all wise and so called will be pushed to the boundaries and all the weak innocents will be drawn to the centre).

6. மனிதநேய வாழ்வு (Humanitarian Life): பணம், அறிவு, தொழில்நுட்பப் பெருக்கத்தின் விளைவாக நற்செய்தியின் நம்பகத்தன்மை அச்சுறுத்தப் படுகிறது. அதற்கு மாறாக லூக்கா 10:25-37ன் உவமையின்படி பிறனை என்னைப்போல் நேசிக்கும் விசுவாசப் பயிற்சியும், செயல்பாடும் வளரவேண்டும். இம்மனித நேயமே முழுமானிடத்தின் வாழ்வுக்கு நேராய் வழிநடத்தும். (Love your neighbor as yourself is the alternative parable told by Jesus in Luke 10:25-37. Obeying His order let's struggle against the explosion of wealth, knowledge & technology in establishing humanitarian life. It's better not to be 'A Human Being' but 'Being Human')

1.Spirit of Mission is breath of life (திருப்பணியின் ஆவி - வாழ்வின் மூச்சு)
2.Spirit of Liberation is Mission to Margins
(விடுதலையின் ஆவி - எல்லைக்குத் திருப்பணி)
3.Spirit of Community is Church on the Move
(கூட்டொருமையின் ஆவி - நகரும் திருச்சபை)
4.Spirit of Pentecost is Good news for all
(பெந்தேகொஸ்தே ஆவி - அனைவருக்கும், அனைத்திற்கும் நற்செய்தி)

Courtesy : World Council of Churches.
நன்றி : உலகத் திருச்சபை மாமன்றம்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

## வாழ்வின் கட்டளைகள்
## (Commandments of Life)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

வாழ்வளிக்கும ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாத உடன்படிக்கையின் ஆண்டவர். கடந்த ஆண்டு முழுவதும் நாம் எண்ணுவதற்கும் மேலான கிருபைகளினால், ஆசீர்வாதங்களினால் நம்மை நிரப்பி வாழவைத்தார். அப்படிப்பட்ட ஆண்டவருக்கு முன்பாக பயத்தோடும், பக்தியோடும், ஒழுக்கத்தோடும் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நாமும் வாழ்ந்து, நம் பிள்ளைகளையும் வழிநடத்தும்படியாய் வாழ்வு தரும் அக்கட்டளைகளை மீண்டும் நினைவுகூறுவோம். அன்றைய இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல, புதிய இஸ்ரவேலராகிய நமக்கும் புதுவாழ்வு தரும் கட்டளைகள் இவைகளே!

இக்கட்டளைகளை மோசேயிடம் வழங்குவதற்குமுன் கர்த்தர் இப்படிச் சொல்லியிருக்கலாம், ‘மோசே, நீயும் உன் மக்களும் செழிப்பான தேசத்திற்கு போகவிருக்கிறீர்கள். அது பாலும் தேனும் ஓடுகிற தேசம். அங்கு ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்கும்போது அதை வழங்குகிற கடவுளாகிய என்னையும், அதை உங்களுடன் இணைந்து அனுபவிக்கும் உடன் மனிதரையும் மறந்துவிடாமல் இருக்கும்படி இவைகளை உன்மூலம் வழங்குகிறேன். இக்கட்டளைகளை மீறி வலதுபுறம், இடதுபுறம் சாயாமல் கடவுளாகிய எனக்கு முதலிடம் கொடுத்து வாழ்பவர் அவைகளின் ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்பார். இவைகள் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்’. இவைகள் மொத்தம் பத்துக்கட்டளைகள். அவைகளில் ஓர் ஒழுங்கான வரிசை இருக்கிறது. முதல் நான்கு கட்டளைகள் கடவுளோடு உள்ள உறவையும் கடைசி ஆறு கட்டளைகள் சக மனிதரோடு கொள்ளவேண்டிய உறவையும் சுட்டிக்காட்டுகின்றன. வாழ்க்கையில் இவைகளைக் கடைபிடிக்கிறவன் நிலைவாழ்வு பெறுவான். ‘ஒரு மனிதன் கடவுளைக் கண்டறியாமல் மனிதனைக் கண்டறியமுடியாது, அதேபோல சகமனிதனை உணராமல் கடவுளை உணரமுடியாது’. அந்த அடிப்படையில் புதுப்பிக்கும் இப்பத்து கட்டளைகளை இப்புதிய ஆண்டிலும் மறுபடியும் கடைபிடிப்போம்.

## I. இறைவுறவுக் கட்டளைகள் (Relationship with God):

மனிதர் ஒருவருக்கொருவர் சரியாய் வாழ்வதற்குத் துவக்கம் கடவுளே. ஆகவே கடவுளோடு கொண்டுள்ள உறவைப் புதுப்பிக்கும் பார்வையில் முதல் நான்கு கட்டளைகளைப் பார்ப்போம்.

**1. பயபக்தியின் கட்டளை (Revering Commandment):** 'உன் கடவுளாகிய கர்த்தர் நானே' என்ற கட்டளையில் கடவுள் பயமில்லாதவர் நல்ஒழுக்கத்துடன் வாழ்வது கடினம் என்பதையும், கடவுள் இல்லாமல் மனித வாழ்க்கை குறைவானது என்பதையும் இக்கட்டளை உணர்த்துகிறது. ஆகவே தெய்வ பயத்தை மீண்டும் புதுப்பித்து, இனி இப்புதிய ஆண்டில் நான் அல்ல, கடவுளே என்னை நடத்துகிறார் என்பதை உணருவோம். பயபக்தியைப் புதுப்பிப்போம்!

**2.பணிந்திருக்கும் கட்டளை (Remaining Commandment):** 'என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம், மேலே வானத்திலும்.... சேவிக்கவும் வேண்டாம்' என்ற கட்டளையில் கடவுளைத் தவிர இவ்வுலகத்தின் அல்லது வானத்தின் எந்த பொருளும் நம் வாழ்வை முடிவு செய்யக்கூடாது, அவைகளுக்கு நாம் பணியவும், தலைவணங்கவும் கூடாது. இறைப்பணிவைப் புதுப்பிப்போம்!

**3.பகுத்தறியும் கட்டளை (Reasoning Commandment):** 'உன் கடவுளாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக' என்ற கட்டளையில் சுயபேச்சாலும், சுய இச்சையாலும், சுய மேட்டிமையினாலும் கடவுளின் நாமத்தைத் தூஷிக்காமல், ஜாக்கிரதையாய் பயன்படுத்தவும், கடவுள் பெயரால் வாக்களிக்கவும் வேண்டும். இறையறிவைப் புதுப்பிப்போம்!

**4.பரிசுத்தத்தின் கட்டளை (Religious piety Commandment):** 'ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க... கட்டளையிட்டார்' என்ற கட்டளையில் கர்த்தருக்கு நன்றி சொல்லவும், செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து நல்வழிபடவும், ஏற்றத்தாழ்வுற்ற நிலையில் அனைவரும் கர்த்தருக்கு அடங்கி நடக்கவும் உணர்த்தப்படுகிறோம். ஐக்கித்துடன் வழிபடுவதின் மூலமாய் புத்துணர்ச்சியையும், பணிதல் மூலமாய் தாழ்மையையும் உணருவோம். பரிசுத்தத்தைப் புதுப்பிப்போம்!

## II. மனுவுறவுக் கட்டளைகள் (Relationship with Human):

மனிதர்களிடையே நல்லுறவின்றி இறைபக்தி உண்மையானதாய் இருக்காது. ஆகவே சொந்தக் குடும்பத்தில் துவங்கி முழு சமுதாயம் எங்குமுள்ள சகமனிதர் அனைவருடனும் நல்மனம் பொருந்தும் புதுவாழ்வின் கட்டளைகள் கடைசி ஆறு.

5.கனப்படுத்தும் கட்டளை (Regarding Commandment): 'நீ நன்றாயிருப்பதற்கும் .......... உன் தகப்பனையும், தாயையும் கனப்படுத்துவாயாக' என்ற கட்டளையில் சகமனிதரைக் கனப்படுத்துவது முதலில் பெற்றோரிலிருந்து துவங்கவேண்டும். பெற்றோர் உட்பட்ட குடும்பத்தில் உண்மையான பிணைப்பை ஏற்படுத்தவேண்டும். பெற்றோரைப் பெரியோரைக் கனப்படுத்தும் பண்பைப் புதுப்பிப்போம்!

6.காப்பாற்றும் கட்டளை (Restoring Commandment): 'கொலை செய்யாதிருப்பாயாக' என்ற கட்டளையில் அனைவருக்கும் வாழ்வை உறுதி செய்யவும், பிறருடைய வாழ்வை அழிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். வாழ்வைப் புதுப்பிப்போம்!

7.கறைநீக்கும் கட்டளை (Rectitude Commandment): 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' என்ற கட்டளையில் நமது மனது, உடல், ஆன்மா அனைத்தையும் கறையற்றதாய் வைத்துக்கொள்ளவும், கடவுள் அனுமதிக்கும் புனித உறவுகளையும் உணர்ச்சிகளையும் மாத்திரம் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். கற்பைப் புதுப்பிப்போம்!

8.கவர்ந்து கொள்ளாக் கட்டளை (Retribution Commandment): 'களவு செய்யாதிருப்பாயாக' என்ற கட்டளையில் பிறர் பொருள் எதையும் அபகரிக்காமல், அவரவர் உடைமையை அவரவர் அனுபவிக்கவும், இல்லாதோர் இருப்போர் ஏற்றத்தாழ்வு மாறவும் வேண்டும். கட்டுப்பாட்டை புதுப்பிப்போம்!

9.கண்ணியத்தின் கட்டளை (Righteous Commandment): 'பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக' என்ற கட்டளையில் நீதியை எச்சூழ்நிலையிலும், எந்த பாதிப்பு வந்தாலும் அனைவருக்கும் உரிய பொதுநீதியாக உரைக்கவேண்டும். வாய்மையைப் புதுப்பிப்போம்!

10.கட்டுப்பாட்டின் கட்டளை (Restraining Commandment): 'இச்சியாதிருப்பாயாக' என்ற கட்டளையில் திருப்தியுடன் வாழ்கின்ற, ஆன்மீகம் தேவை என்பதையும் ஆசைகளை கட்டுப்படுத்தி இறைவன் அளிக்கும் ஆசீர்வாதங்கள் போதும் என்று மனதோடு வாழவேண்டும் திருப்தியைப் புதுப்பிப்போம்!

இறைப்பணியில்,<br>திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,<br>பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## வாக்குத்தத்த செய்தி

## கர்த்தர் யோசுவாவை நோக்கி: எழுந்திடு, கடந்திடு, புகுந்திடு

நமக்கு முன்செல்லும் தேவனாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். புது ஆண்டுக்குள் அடி எடுத்து வைத்திருக்கும் நமக்கு ஆண்டவர் தரும் அருள் வார்த்தை யோசுவா 1:2.

விடுதலைப் பயணத்தின் புதிய ஆரம்பமாக, புதிய தலைமைத்துவத்தைப் பெற்ற யோசுவாவுக்கு, கர்த்தர் கொடுத்த கட்டளையை, இந்த வருடத்தில் கர்த்தர், நமக்குக் கொடுக்கிறார். கொடுக்கின்ற இந்த கட்டளையை (எழுந்திடு, கடந்திடு, புகுந்திடு) நிறைவேற்ற ஒத்தாசையும் செய்கின்றார். யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானைச் சுதந்தரிக்கச் செய்தது போல, நம்மையும் இந்த ஆண்டு கானானின் பலனைப் பெறும்படி வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக. இஸ்ரவேலரைக் கரம்பிடித்து, இறுதிவரை அவர்களை மகிமையாய் வழிநடத்தின கர்த்தர், இந்த ஆண்டும் அவர் நம்மை நடத்தும்படி அர்ப்பணிப்போம். முடிவுபரியந்தம் ஆசீர்வாதமாய் நடத்துவார்.

**1. எழுந்திடு :** தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம்தான், விடுதலையாக்கப்பட்ட ஜனம்தான். ஆனால், மோவாபின் சமவெளியில் (உபா.34:8a) சோர்ந்துபோய், பயணத்தைத் தொடராமல் அங்கேயே உட்கார்ந்து விட்டனர். ஏன் சோர்வு? பயணத்தில் ஒரு துயர சம்பவம்: வழிநடத்தின ஆதாரமாகிய மோசே மரித்துப்போனான். ஆகவே யோசுவாவும், ஜனங்களும் கண்ணீருடன், சோர்ந்து உட்கார்ந்து விட்டனர். மட்டுமல்ல, யோசுவாவுக்கு வேறு தனிப்பட்ட சவால்களும் இருந்தன. ஜனங்கள் தன்னைத் தலைவாராக ஏற்றுக்கொள்வார்களா என்ற சவாலால் மனம் சோர்ந்துபோய் யோசுவாவும் உட்கார்ந்துவிட்டான். இப்படிப்பட்ட சோர்வின் நிலையில் ஜனங்களும், யோசுவாவும் இருந்த நேரத்தில்தான் கர்த்தர் யோசுவாவிடம், “எழுந்திரு” என (யோசுவா 1:2b) பேசுகிறார். அன்பானவர்களே, ஒருவேளை இந்த வருடத்தில், நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் (குடும்பத்தில், வேலையில், விசுவாச வாழ்வில்) நிமித்தமோ அல்லது ஏதோ முக்கியமான, அரிதானதொன்றை கடந்த ஆண்டில் இழந்ததினிமித்தமோ, கண்ணீரோடு, பாரத்தோடு சோர்ந்துபோய் இவ்வாண்டை துவக்கலாம். அப்படி உட்கார்ந்திருக்கிற உங்களை எழுப்புவார்.

யோசுவாவை எப்படி எழுப்பினார்? முதலாவது, யோசுவாவுக்குக் கொடுத்த அபிஷேகத்தை நினைவுபடுத்தினார் (உபா.34:9): இரண்டாவதாக மோசேயோடு இருந்தது போல உன்னோடு இருப்பேன் (யோசுவா 1:5) என்று வாக்கு பண்ணி, யோசுவாவை எழுப்பினார். இப்படி ஏன் அவனை

எழுப்பினார்? தேவன் ஆயத்தம்பண்ணி வைத்திருந்த கானானின் ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்கவே. அப்படியே நம்மையும் தேவன் நமக்கு ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் ஆசீர்வாதத்தை, நம்மை எழுப்பி, அதை சுதந்தரிக்கச் செய்வார்.

2. கடந்திடு: யோர்தானைக் கடந்தால் கானான் தேசம்தான். அதை இக்கரையிலிருந்து பார்க்கிறார்கள். கானானைச் சுதந்தரிக்க வேண்டுமென்றால், கரைபுரண்டோடும் யோர்தானைக் கடக்கவேண்டும். தடையாய், ஓடுகிற ஆற்றைக் கடக்க ஆண்டவர் ஆலோசனைக் கொடுக்கிறார். நம் வாழ்வில் ஆசீர்வாதத் தடைகள் உண்டாகும்படி, நம் வாழ்வை நெருக்கும் கட்டுகள், கண்ணிகள், உபத்திரவங்கள், சோதனைகள், மனித சூழ்ச்சிகள் போன்றவற்றைக் கடக்க இந்த ஆண்டில் நமக்கு தேவன் ஆலோசனைகள் தந்து உதவி செய்வார்.

யோர்தானைக் கடக்க என்ன செய்யவேண்டும்? முதல் ஆலோசனை : கண்கள் உடன்படிக்கைப் பெட்டியையே பார்க்கவேண்டும். அப்படியென்றால், ஆண்டவரோடு ஒரு உடன்படிக்கைச் செய்து (அர்ப்பணிப்பு) அதையே கண்பார்த்து பயணிக்கவேண்டும். இரண்டாவது ஆலோசனை : பரிசுத்தம் பண்ணவேண்டும். அப்பொழுது யோசுவா 3:4bல் கூறப்பட்டிருக்கும் வழி திறந்ததுபோல, இந்த வருடத்தில் நமக்கும் ஆச்சரியமான வழியைத் திறப்பார்.

3. புகுந்திடு: இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தில் புகுந்து, அதின் பலனை "அந்த வருடத்தில்" புசித்தார்கள் (யோசுவா 5:12). அதுபோல ஆண்டவர், இந்த வருடத்தில் கானானின் பலனைப் பெறும்படி நடத்தப்போகிறார்.

கானானின் பலன் என்றால் என்ன? முதலாவது : பரதேசியாய் வாழ்ந்த நாட்களுக்கு முடிவுண்டாக்கி, சொந்தமல்லாததைச் சொந்தமாக்கினார். இந்த ஆண்டு நமக்கும், கர்த்தர் சொந்தமல்லாததைச் சொந்தமாக்குவார். இரண்டாவது : நாற்பது ஆண்டு கால அலைச்சலுக்கு முடிவுண்டாக்கி, இளைப்பாறுதலைக் கட்டளையிட்டு, பின்தொடர்ந்து வந்த எகிப்தின் நிந்தையை இனி இல்லாதபடி புரட்டிப்போட்டார் (யோசுவா 5:9). நமக்கும் இவ்வருடத்தில், நிந்தையை மாற்றி இளைப்பாறுதலைத் தருவார். மூன்றாவது: தேவபாதுகாப்பைக் கட்டளையிடவும், சத்துருக்களின் கூட்டத்தைத் துரத்தவும் கர்த்தருடைய பட்டயம் (யோசுவா 5:13) கானான் தேசத்தில் உண்டு. இந்த ஆண்டு கானானின் பலனாகிய இந்த நன்மைகளைத் தந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

இந்த ஆண்டு நம்மை, எழும்பச் செய்வார், கடக்கச் செய்வார், உட்புகச் செய்வார். ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

**சிந்திக்க ஒரு சிறுகதை**

Winter vacation முடிந்து மாணவர்கள் பள்ளிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். விக்கியைக் கண்டவுடன் எல்லாருக்கும் பெரிய அதிர்ச்சி! எப்போதுமே தலையை வாரிய பிறகு கலைத்து விட்டுக் கொள்ளும் அவன் அன்று ஒழுங்காகத் தலை வாரியிருந்தான். காலில் ஷூக்கள் பாலிஷ் போடப்பட்டு பளபளவென மின்னின. எவரையும் கவனிக்காமல் அலட்சியமாகச் செல்லும் அவன், 'விடுமுறை எப்படியிருந்தது' என்று ஓரிரு மாணவர்களிடம் விசாரித்தான். அவன் கேலி செய்கிறானோ என்று நினைத்த அவர்கள் பதில் சொல்லாமல் விரைந்து சென்றுவிட்டார்கள். முரட்டுப்பையன் என பெயர் எடுத்திருந்த விக்கி மாறிவிட்டானா? ஒன்றுமே புரியவில்லை.

'பாபு வரட்டும் என்ன நடக்கிறது என பார்ப்போம்' என்று மற்ற மாணவர்கள் இரகசியமாயப் பேசிக்கொண்டார்கள். பாபுவும் விக்கியைப்போல 8-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். அவனும் ஒரு முரட்டுப்பையன். விக்கியும் பாபுவும் தங்களுக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்து வைத்திருந்தார்கள். அடிக்கடி மோதிக்கொள்வார்கள்.

தேர்வுக்கு வரும்போது, பாபு விடையைத் துண்டுத்தாளில் எழுதிக்கொண்டு வந்ததை விக்கி ஆசிரியரிடம் காட்டிக் கொடுத்துவிட்டான். அதனால் ஆசிரியர் அவனைக் கடுமையாகக் கடிந்துகொண்டார். தேர்வு முடியும் வரை காத்திருந்த பாபு, கடைசிநாளில் விக்கியுடன் மோதிவிட்டான்! மாறி மாறி கெட்ட வார்த்தைகளால் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தார்கள். இதை ஒரு மாணவன் போய் வகுப்பு ஆசிரியரிடம் கூறி அவரை அழைத்து வந்துவிட்டான். அவர் அவர்களைக் கடிந்துகொண்டார்.

'இப்போது leave துவங்கிவிட்டது. நீங்கள் உங்கள் ஊர்களுக்குத் திரும்பவேண்டும். ஆனால் வரும்போது, நல்ல பிள்ளைகளாகத் திரும்பாவிட்டால் உங்களைப் பார்த்துக் கொள்வேன்' என்று அவர்களை எச்சரித்து அனுப்பினார் ஆசிரியர். அதோ, பாபு வருகிறான் என ஒரு மாணவன் கிசுகிசுத்தான். என்ன நடக்குமோ என மாணவர்கள் திகிலோடு காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பாபுவைக் கண்டவுடன், விக்கி சிரித்தபடியே அவனிடம் சென்றான். 'என்னை மன்னித்துவிடு' என கூறியபடியே கையைக் குலுக்கினான். பாபுவுக்கு ஒரே அதிர்ச்சி.

அன்றைக்கு நான் உன்னை மிகவும் மோசமாகப் பேசிவிட்டேன், என்னைத் தயவாய் மன்னித்துவிடு என விக்கி கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது வகுப்பு ஆசிரியர் அங்கே வந்தார்! என்னடா உங்கள் சண்டை இன்னும் தீரவில்லையா? வாருங்கள் என் அறைக்கு என்று அழைத்தார். No sir, இப்போது நாங்கள் friends ஆகிவிட்டோம் என கூறிய விக்கி பாபுவின் தோளை அணைத்துக் கொண்டான். நல்லவேளை, தண்டனைக்குத் தப்பிவிட்டீர்கள் என சொல்லிவிட்டு சென்றார் ஆசிரியர்.

ஒருவேளை, தண்டனைக்குத் தப்புவதற்காகத்தான் விக்கி இப்படி நடிக்கிறானோ! என்று மற்ற மாணவர்களுக்குச் சந்தேகம் வந்தது. இடைவேளையின்போது விக்கியும், பாபுவும் தோட்டத்து பெஞ்சில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்த ஒரு பையன் மற்றவர்களிடம் வந்து சொன்னான். ஒருசில மாணவர்கள் சத்தமில்லாமல் அந்த பெஞ்சுக்கு அருகிலிருந்த மரத்துக்குப் பின்னால் ஒளிந்து நின்றுகொண்டு கவனித்தார்கள்.

டேய் பாபு, நீயும் ஒரு கிறிஸ்தவன்தானே? நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடக்கவேண்டும் அல்லவா? நானும் மோசமான பையனாகத்தான் இருந்தேன். இந்த vacation-ல் அம்மா ஒரு தியான முகாமுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன். இப்போது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. முன்பு யாருக்கு எதிராகத் தப்பு செய்தேனோ அவர்களிடம் எல்லாம் இப்போது மன்னிப்பு கேட்டு வருகிறேன் என விக்கி கூறினான்.

விக்கி கேட்ட மன்னிப்பு பாபுவின் இருதயத்தை கரைத்தது. ‘அந்த முகாமில் என்ன சொல்லிக் கொடுத்தார்கள்?’ என பாபு கேட்டான். விக்கி விளக்கிச் சொல்ல ஆரம்பித்தான். விக்கி உண்மையிலே மாறிவிட்டான் என ஒளிந்து நின்ற மாணவர்கள் அறிந்துகொண்டார்கள். அந்த நல்ல செய்தியை மற்றவர்களுக்கும் சொல்லவேண்டுமென நைசாக நழுவிவிட்டார்கள்!

இப்போதெல்லாம் விக்கியும் பாபுவும் சேர்ந்து வேதாகமம் வாசிப்பதையும், Junior church-ல் ஒழுங்காக ஆசிரியர் சொல்வதைக் கவனித்துக் கேட்பதையும் கண்ட இருவரின் பெற்றோரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். பாபுவும், விக்கியும் ஒரே apartment-ல் இருந்து, ஒரே Church-க்கு செல்பவர்களாய் இருந்தும், வேதவார்த்தைகளை seriousஆக எடுக்காததால் முரடராக வாழ்ந்த அவர்கள், இன்று மனம் திரும்பி புதுசிருஷ்டியானார்கள்.

**வேதவாசிப்புப் பகுதி :** லூக்கா 19:1-10
**மனப்பாட வசனம் :** 2 கொரி. 5:17

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின், உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

வருஷத்தை நன்மையால் முடிசூட்டி அதை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய நம் தேவன் கடந்த வருஷம் முழுவதுமாக நம்மோடு இருந்து, வெற்றிகரமாக வருஷத்தை முடிக்கக் கிருபை செய்தார். ஆசீர்வாதங்களினால் மட்டுமல்ல, கஷ்டங்களிலும் நஷ்டங்களிலும் தம்முடைய கிருபையை பூரணமாக விளங்கச் செய்த நம் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். பண்டிகை நாட்களை தாயகம் சென்று உற்றார் உறவினரோடு கழித்த தெய்வ பிள்ளைகளை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். உங்கள் பண்டிகைக் காலங்களை கிறிஸ்துவுக்குள் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்பி தேவனைத் துதிக்கிறேன்.

டிசம்பர் 4-ம் தேதி அன்று நமது சிறுவர்களின் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனையை திரு. ஜேஸன் அவர்கள் மிகச்சிறப்பாக நடத்தினார்கள். டிசம்பர் 7-ம்தேதி அன்று நமது முகாம் சகோதரர்கள் DIP பகுதியில் நமது சபைப்போதகர் Rev.Christopher அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் மரவிழா நடத்தி மகிழ்ந்தார்கள். அதில் Shelton Shirts நிறுவனத்தினர் பரிசுகள் வழங்கினார்கள். திரு. ரோலன்ட் அவர்கள் நமது திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும் முகாம் சகோதரர்களுக்கும் இலவச இசைத்தட்டு வழங்கினார்கள். இவர்களுக்கு நமது திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டிசம்பர் 8-ம் தேதி அன்று நமது திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் ஆலய ஆராதனையில் கிறிஸ்மஸ் கால சிறப்புப் பாடல்கள் பாடி நம்மை மகிழ்வித்தார்கள். டிசம்பர் 8-ம் தேதி அன்று மாலை நமது கிளைச்சபையான ஃபுஜைரா திருச்சபையின் அறுப்பின் பண்டிகை மிகச் சிறப்பாக நடைபெற்றதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். அதற்காக உழைத்த திரு.S.Prince அவர்களுக்கும் இன்னும் பலவிதங்களில் அவருடன் உதவி செய்த யாவருக்கும், கொடுத்த, ஜெபித்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

டிசம்பர் 14-ம் தேதி அன்று நமது சபையின் கிறிஸ்மஸ் மரவிழா இந்தியன் உயர்நிலைப் பள்ளியில் வைத்து மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறுவர் வேதபாடசாலை மற்றும் Corner Stone பிள்ளைகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி நம்மை மகிழ்வித்தார்கள். இதற்காக உழைத்த சிறுவர் வேதபாடசாலை பொறுப்பாளர் திருமதி ஜெயந்தி சம்பத் அவர்களுக்கும், Corner Stone பொறுப்பாளர் திரு. ஜான்சன் அவர்களுக்கும், மற்றும் அவர்களோடு இணைந்து பணிசெய்த அனைத்து ஆசிரியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கு நமக்கு இடம் கிடைக்க உதவிய திரு. டேவிட் தாமஸ் அவர்களுக்கும், அனைத்து தன்னார்வத் தொண்டர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டிசம்பர் 15-ம் தேதி அன்று நமது சபையின் பாடகர் குழுவினர் ஆராதனையில் சிறப்புப் பாடல்களை மிகச்சிறப்பாகப் பாடி நம்மை மகிழ்வித்தார்கள். சிறுவர்களும் இணைந்து பாடியது அனைவரையும் பிரமிக்க வைத்தது. அவர்களை உற்சாகப்படுத்திய அனைத்து பெற்றோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக முன் வந்து அதை நமக்கு நடத்திக் கொடுத்த திரு. நவீன் மற்றும் நினித்தா நவீன் குடும்பத்தினருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சிறுவர் வேதபாடசாலை டிசம்பர் 15-ம் தேதி அன்று நிறைவுற்றது. இவ்வருடம் நம் சிறுவர் வேதபாடசாலையில் சிறப்பு மதிப்பீட்டின் படி பரிசுகள் வழங்க உள்ளோம். நமது கிறிஸ்மஸ் ஆராதனை மிகவும் சிறப்பாக அமைய தேவன் கிருபை செய்தார். 2017-ம் வருடத்தில் தேவன் செய்த நன்மைகளை எண்ணித் துதிப்பதற்காக 30-ம் தேதி சனிக்கிழமை அன்று சிறப்புத் துதி ஆராதனை நடை பெற்றது. 31-ம் தேதி அன்று பழையவருட துதி ஆராதனையும் அதைத் தொடர்ந்து புதுவருட உடன்படிக்கை ஆராதனையும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நமது கிளைச்சபைகளிலும் பண்டிகைக்கால எல்லா நிகழ்வுகளும், பண்டிகை ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றது. வழக்கம்போல் ஆராதனையைத் தொடர்ந்து ஆயர்களை கனப்படுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்வருடம் அனைவருக்கும் சிறப்பு வேதவாசிப்பு அட்டவணை வழங்கப்பட்டது. சபையார் அனைவரும் அதை அனுதினமும் வாசித்து தெய்வ ஆசி பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Manikandan S. | 2745 | Dubai |
| 2 | Mr. S. Miracle Lovely | 2746 | Dubai |
| 3 | Mr. S. Gladson Lovely | 2747 | Dubai |
| 4 | Mr. Sujil Wilson | 2748 | Dubai |
| 5 | Mr. Sumesh | 2749 | Dubai |
| 6 | Mr. P. Anand Raja | 2750 | Dubai |
| 7 | Mr. Jerinpaul Balan | 2751 | Dubai |
| 8 | Mr. Jehu Levian Victor J | 2752 | Dubai |

# புத்தாண்டும்! வாழ்த்தும்! - 2018

புத்தாண்டும் முத்திரையைப் புத்தாளில் குத்தியாச்சு
பத்துமாதக் கருவறையும் பெத்தலையில் திறந்தாச்சு
எத்திக்கும் தித்திக்கும் உத்வேகம் பாத்தாச்சு
வித்தகமும் சத்துவமும் புத்தொளியில் வெளுத்தாச்சு

அறிவுலகம் விரிவடையும் அறிகுறிகுறியாம் வருடவரம்
நிறுத்தாமல் உறுத்தாமல் விரைந்தோடும் தொடரோட்டம்
இருஆண்டும் ஒருதாண்டில் இருகரமும் ஒருபரிசம்
ஒருநொடி இருபடி நிறுவிட்ட முதநாளாம்

சுழலுது இழைதவறா கோள்,நாள்நீள் யுகாதியுகம்
அளந்திடா காலம் தளந்திடா ஓட்டம்
எழுதிடா சரித்திரம் இழுத்துவைத்து எழுதுதாம்
அழைக்குது அனுபவம் தழைக்குது கணியுகம்

வானம் புதியது பூமிக்கும் விதியது
வானத்து ஞானத்தால் வையத்து நன்மையாகுது
தானம் உயருது தைரியம் வளருது
ஆனதெல்லாம் அன்பின் ஈவு இனிக்குது

வருடத்தை நன்மையால் முடிசூட்டி விடிவிக்கிறீர்
வறுமைக்கு முற்றுப்புள்ளி முடிவெடுத்து முடிக்கிறீர்
வரத்துப்போக்கு வழிகளெல்லாம் நெய்யாய்ப் பொழிவித்தீர்
கரைசேர்க்கும் விருதாக குறைவெல்லாம் நிறைவாக்கினீர்

பஞ்சம் பசியும் லஞ்சமும் நெஞ்சிலும்
வஞ்சகமும் விபத்தும் அஞ்சுதலும் திகிலும்
நஞ்சாகும் நாசம் மோசத் தீமைக்கும்
துஞ்சாமல் காத்து தஞ்சம் கொடுத்தருளும்

மிரட்டும் அணுஆயுதத் திரட்டும் தவிப்பும்
துரத்தும் தீவிர வாதத்தை விரட்டும்
புரட்டும் கருத்தும் முரட்டு முனைப்பும்
உருட்டி விட்டு உரியதைத் தந்தருளும்

கடிகார முடியேறும் முள்மூன்றும் ஒண்ணாகுது
அடிக்கிற ஆலயமணி நாவுகள் பேசுது
துடிக்கிற மின்விளக்கு ஒளிவெள்ளம் வீசுது
வெடிக்கிற வாண வெடிகள் விண்ணேறுது

சூரியப் பாதையில் நேர்வரும் நாடுகள்
பாரெலாம் திறந்தவிழி பரவசப் பரப்புகள்
பாரிய கப்பலும் ஊதிடும் சங்குகள்
ஊரெலாம் மக்கள் திரண்டுகொண் டாட்டங்கள்

செழிப்பும் களிப்பும் வழிகளில் தழுவட்டும்
துளிர்க்கும் அன்பால் விழிக்கட்டும் மனுக்குலம்
ஒளிரட்டும் உறவுகள் உயரட்டும் மனிதம்
உள்ளத்து ஆழத்தால் புத்தாண்டில் வாழ்த்துகிறோம் !

ஆதாரம் : சங்கீதம் 65:11, 77:10, 102:27,
ஏசாயா 40:31, 60:1,20
மத்தேயு 4:15, யோவான் 1:9,
2 பேதுரு 3:13, எபிரேயர் 1:11-12,
வெளிப். 21:1

கவிதை எண் : 204.

ஆக்கம் : மணிமுத்து.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜனவரி 2018

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-01-2018 பிரசன்னத் திருநாள் | அனைத்து நாடுகளையும் ஈர்க்கும் கிறிஸ்து | ஏசாயா 56:1-8 | வெளிப். 7:9-17 | மத்தேயு 2:1-12 | 72 |
| 12-01-2018 | ஓர் ஆண்டவர், ஒரே திருமுழுக்கு | எண்ணா. 11:23-30 | 1 கொரிந். 10:1-13 | யோவான் 10:7-18 | 23 |
| 19-01-2018 சபை ஒருங்கிணைவுத் திருநாள் | நீதி சமாதானத்--திற்கான ஒற்றுமை | எசேக். 37:15-28 | பிலிப். 4:8-20 | மத்தேயு 5:21-26 | 4 |
| 26-01-2018 குடியரசுத் திருநாள் | பொறுப்புள்ள குடியுரிமை | ஆமோஸ் 5:7-15 | ரோமர் 13:1-10 | மாற்கு 2:13-17 | 146 |

# தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!!

**யாக்கோபு**

மறுநாள் காலையில் ஏமாரும், அவன் குமாரனாகிய சீகேமும் யாக்கோபிடம் தீனாளின் காரியமாக அவர்கள் பதிலை கேட்க கூடிவந்தனர். யாக்கோபுடைய குமாரர் அவர்களிடம், "எங்கள் தகப்பனாகிய ஈசாக்கிடம் உங்களது வார்த்தைகளைக் கூறினோம். அவருக்கு உம்முடைய வார்த்தைகள் மிகவும் பிரியமாயிருந்தது. அவர் சொன்னதாவது, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனுடைய கட்டளை என்னவென்றால், இவ்வுலகில் நம்முடைய குமாரத்திகளை பெண்கொள்ள விரும்பும் நம்முடைய சந்ததியாரல்லாத ஆண்மக்கள் நம்மைப்போலவே விருத்தசேதனம் பெற்றவராயிருக்கவேண்டும் என்பதே. ஆகவே நீங்கள் எங்களுடைய எபிரெய பெண்களைக் கொள்ளவேண்டுமாயின், உங்களது ஆண்மக்கள் அனைவரும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். நீங்கள் எங்களுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடாவிட்டால், நாங்கள் எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொடுப்பதில்லை. நாங்கள் உங்களிடம் வந்து, எங்கள் குமாரத்தியை எடுத்துக்கொண்டு வந்து விடுவோம்" என்றார்கள்.

சீகேமுக்கும் ஏமாருக்கும் இது சரியாகத் தோன்றவே, அவர்கள் இதற்கு சம்மதித்தனர். அவர்கள் பட்டணத்து மனுஷர் அனைவரையும் வரவழைத்து, அவர்களையும் இதற்கு சம்மதிக்கச் செய்து விருத்தசேதனம் செய்துவிட்டனர். ஏமாரும் அவனது குமாரரும் விருத்தசேதனம் செய்து கொண்டனர். ஆனால் ஏமாரின் மகனாகிய பேரேத்தினுடைய குமாரன் சிதேக்கிம் அவனுடைய ஆறு சகோதரர்களுடன் இதை எதிர்த்தார். ஏமாரும் சீகேமும் இதைக் கேள்விப்பட்டபோது, அவர்களை அழைத்து, விருத்தசேதனம் பண்ணும்படி கூறினார்கள். அவர்கள் ஏமாரையும், சீகேமையும் நோக்கி, "என்னக் காரியம் செய்துவிட்டீர்? கானானிய ஸ்திரீகளுக்குள் ஒரு ஸ்திரீயும் உங்களுக்கு கிடைக்கவில்லையா? நமக்கு கொஞ்சமும் அறிமுகம் இல்லாத இந்த எபிரெயப் பெண்ணிற்காக, அவள் தகப்பனார் கூறிய காரியங்களை செய்ய விரும்பியது ஏன்? இதைக் கேள்விப்படும் யாவரும், ஒரு பெண்ணிற்காக ஏமாரும் சீகேமும் அனைவரையும் விருத்தசேதனம் பண்ணுவித்தார்கள் என்ற கேவலமாக பழிச்சொல்லைக் கேட்கப் போகிறீர்களா? நாளை உம்மையும், உம்மை நம்பி இக்காரியத்தை செய்த அனைவரையும் கொன்று விடுவோம்" என்றார்கள். இதையறிந்த பட்டணத்து மனுஷர் அனைவரும் மிகவும் கலங்கி, தாங்கள் செய்துகொண்ட விருத்தசேதனத்திநிமித்தம் மனம் வருந்தினார்கள்.

ஏமாரும் சீகேமும் அவர்களை நோக்கி, "நீங்கள் கூறியது முற்றிலும் சரியே. நம்முடைய தகப்பனார் கூறாத ஒரு காரியத்தைத்தான் நாம்

செய்துள்ளோம். அந்த பெண்ணைக் கொள்வதற்கு நாம் செய்யவேண்டியது இது ஒன்று தான் என்பதால் இதற்கு செவிமடுத்தோம். நாங்கள் மறுபடியும் குணமாகி, எங்கள் பெலனைத் திரும்ப பெறும்போது நாங்கள் உங்கள் மனவிருப்பத்தின்படி செய்வோம்" என்றார்கள்.

தீனாள் நடந்த காரியங்களை கண்ணுற்று, தன்னுடைய வேலைக்காரிகளை அழைத்து, சிதேக்கிமுடைய வார்த்தைகளையும், அவனுடைய சகோதரர்களின் வார்த்தைகளையும், ஏமார் மற்றும் சீகேமுடைய மறுமொழிகளையும் தன்னுடைய தகப்பனாருக்கு தெரிவிக்க அவர்களை அனுப்பி வைத்தாள். இதைக் கேட்ட யாக்கோபுடைய கோபம் மூண்டது. இதைப் பார்த்த சிமியோனும் லேவியும், தங்கள் பட்டயத்தை எடுத்துக்கொண்டு சிதேக்கிமுடைய இடத்திற்கு வந்து, அவனோடுகூட விருத்தசேதனம் செய்யாத இருபது பேர்களில் பதினெட்டு பேரை சங்கரித்தார்கள். இருவர் தப்பித்துக்கொண்டார்கள். இவர்கள் இதைத்தொடர்ந்து பட்டணத்திற்குள் நுழைந்து, விருத்தசேதனம் பண்ணப்பட்ட அனைவரையும் சங்கரித்தார்கள். தீனாளை தங்களோடு அழைத்து வந்தனர்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த
Mrs.Jenitta Kingson அவர்களின் தகப்பனார்
Mr.Paul Raja Sekar அவர்கள் 03-12-2017 அன்றும்,
தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பிரதம பேராயர்
Mr.B.P.Suganthar அவர்கள் 05-12-2017 அன்றும்,
நமது சபையைச் சேர்ந்த
Mrs.Ruth Anitha Anand Samson அவர்களின் தகப்பனார்
Mr.Harry Perionath அவர்கள் 10-12-2017 அன்றும்,
நமது சபையைச் சேர்ந்த
Mr.Rajasekar Inbaraj அவர்களின் தாயாரும்
நமது சபையின் முன்னாள் அங்கத்தினருமான
Mrs.Helen Inbaraj அவர்கள் 21-12-2017 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# திருச்சபை ஜெபநாள் 07-01-2018 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்.
என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக" சங்கீதம் 102:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- ஃபுஜைரா கிளைச்சபையின் ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை மற்றும் நமது எல்லா சபைகளின் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை, கிறிஸ்மஸ் மரவிழா, கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகை ஆராதனைகள் யாவும் ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- கிறிஸ்துமஸ், புத்தாண்டு கால வழிபாடுகள், சிறப்பு நிகழ்வுகளுக்காக
- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- நமது சபையின் இன்பச்சுற்றுலா சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.

"என் விண்ணப்பம் உமது சமூகத்தில் வருவதாக;
என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்." சங்கீதம் 88:2

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# மரங்கள்

மனிதனைப் படைக்கும் முன்னே மனிதனுக்காக மரங்களைப் படைத்து விட்டார் தேவன். செடி, கொடி, மர வகைகள் அவரின் மகிமையை வெளிப்படுத்துகிறது. அழிந்து போகிற பூமியிலே அழகான மரங்களை உருவாக்கி வளர்க்கிற தேவன், அழியாத தேவனுடைய ராஜ்யத்திலே நம்மை நீதியின் விருட்சங்களாக நாட்டி அழகு பார்க்கிறார். "அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" (ஏசா 61:3).

